அமைத்து அந்த வழக்குகளை விரைவாக முடிப்பதற்கு அரசிடம் ஏதாவது பரிந்துரை இருக்கிறதா ? ஏன் இன்னும் பரிந்துரை செய்யாமல் இருக்கிறார்கள் என்பதைக் கேட்கக் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச் சந்திரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து விளக்க விரும்புகிறேன். அந்த நீதிபதி பதவிகள் நிறைவு செய்யப் பட வேண்டும் என்பதற்கான முயற்சிகள் முறைப்படி மேற் கொள்ளப்பட்டு இருக்கின்றன.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, உங்களிடம் இசைவு பெற்று நான் இந்தச் செய்தியினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர்கள் பல்லாயிரம் பேர் அதனை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் இங்கிருந்து உற்பத்தி செய்து அமெரிக்க நாட்டிற்கு அனுப்பிய துணிகள் பலவகை அங்குள்ள துறை முகங்களில் தேங்கிக் கிடப்பதாகவும், அமெரிக்க அரசாங்கம் அதை ஏற்க மறுப்பதாகவும், கரூரிலிருந்து இப்படிச் சென்றி ருப்பது மட்டும் ரூ. 80 கோடி மதிப்புடையது என்றும், இந்தியா வினுடைய பல பகுதிகளிலிருந்து சென்றிருப்பதைப் பார்க்கும் போது பல கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதாகவும் அதனால் கைத்தறி நெசவாளர்கள், சாயப்பட்டரையிலே வேலை செய்கின்றவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மிகப் பதைப்போடு செய்தியினைத் தந்து இருக்கிறார்கள். நாளேட்டிலே வந்திருக்கிறது. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக மத்திய அமைச் சோடு அல்லது பிரதமர் அவர்களோடு தொடர்பு கொண்டு, இங்கு இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுடைய துயரைத் துடைக்க வேண்டுமென்று நான் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அது தொடர்பாக உடனடி யாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதனைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான பிரச்சினை இது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் ஒரு ஒத்திவைப்புத் தீர் மானமாகவோ, கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ கொடுத்திருப் பார்களானால் நான் அதை விசாரித்து விவரங்களைச் சேகரித்து இந்த அவைக்கு அளிக்கும்போது அது அவருக்கும், அவைக்கும், பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கும் பயனுள்ள தாக இருக்கும். கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ, ஒத்தி வைப்புத் தீர்மானமாகவோ முறைப்படி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில், இதைப்பற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானமோ, ஒத்திவைப்புத் தீர்மானமோ கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏற்கெனவே, கவன ஈர்ப்புத் தீர்மானம் நான் அளித்திருக்கிறேன். அது மறுக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அலுவல் தொடர்பானவற்றை அவையிலே பேசக்கூடாது. அறையிலே வந்து பேசினால் உங்களையும் நான் கவனிப்பேன்.

(ஆ) சென்னை உயர்நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் நியமனம் செய்தல் குறித்து—தொடர்ச்சி.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, உயர் நீதிமன்ற நீதிபதி நியமனம் குறித்து எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினையை ஒட்டியது என்னுடைய பிரச்சினை. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் விகிதாச்சாரப்படி அதாவது மாவட்ட நீதிபதிகளிலிருந்து நியமிக்கப் படக்கூடியவர்கள் இத்தனை பேர், வழக்கறிஞர்களிலிருந்து இத்தனை பேர் நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்ற விகிதாச்சாரப்படி ஒரு தீர்மானத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன்படி நியமிக்கப்படுவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒன்று, இன்னொன்று நீதிபதிகளைப் பற்றி நாம் இந்தச் சட்டமன்றத்தில் விவாதிப்பது கிடையாது. காரணம் நம்முடைய அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது. நியமனத்திற்கு முன்பேயாவது யார் யாருடைய பெயர்களை அரசாங்கம் பரிந்துரை செய்கின்றதோ அவ இந்த அவையின் முன்னால்வைக்கப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வைத்து விவாதிக்கப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சென்னை வழக்கறிஞர் சங்கத்தினுடைய உணர்வுகளை நான் மதிக்கிறேன். மறுக்கவில்லை. ஆனால் சில நேரங்களில் விகிதாச்சாரம் என்பது ஒவ்வொரு முறையும் நீதிபதிகளை நியமிக்கும்போது, மூன்று பேரை நியமிப்பது என்றால், 2 : 1 என்கின்ற முறையிலே வரவேண்டும் என்பது இயலாது, மொத்தமாக இருக்கின்ற காலி இடங்களில், இந்த ஆண்டு நிரப்பப்படுகிற இடங்களில் அந்த விகிதாச்சார முறை வருகிறதா, இல்லையா என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் விகிதாச்சார முறைக்காக சில நேரங்களில் நாம் ஒரு குறிப்பிட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்